# செயலாய்வு

## I. ஆய்வுத் தலைப்பு

அடிப்படை உரிமைகள் மற்றும் அடிப்படை கடமைகளை எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு காணொளிக் காட்சிகள் வாயிலாக புரிந்துகொள்ளும் நிலையை மேம்படுத்துதல்.

## II. ஆய்வின் பின்புலம்

தமிழக ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை - 6. மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களும் ஒருங்கிணைந்து பல்வேறு நிலைகளில் உறுதுணை புரிந்து வருகின்றன.

ஆய்வாளர் கடந்த 8 வருடங்களாக மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் வானரமுட்டியில் சமூக அறிவியல் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார்.

எட்டாம் வகுப்பு ஆசிரியர்களுக்கு சமூக அறிவியல் பணியிடைப் பயிற்சி வழங்கும் போது அடிப்படை உரிமைகளும், கடமைகளும் என்ற பகுதியை மாணவர்கள் புரிந்து கொள்வதில், வேறுபடுத்தி உணர்வதில் கடினப்பகுதியாக உள்ளது என்று கருத்து தெரிவிக்கப்பட்டது.

கோவில்பட்டி, கயத்தாறு, திருச்செந்தூர் ஒன்றியத்தில் பள்ளிப் பார்வைக்கு சென்ற போது எட்டாம் வகுப்பு மாணவர்களிடம் அடிப்படை உரிமைகள், கடமைகள் பற்றி வினாக்களைக் கேட்ட போது அப்பகுதி பற்றிய கேள்விகளுக்கு சரியான பதில் அளிக்காததாலும், அவற்றினை புரிந்து கொள்வதில், வேறுபடுத்தி உணர்வதில் சிரமம் உள்ளது என அறிந்ததாலும் எட்டாம் வகுப்பிலேயே அத்தகைய குறைகள் நீக்கப்பட்டு அடிப்படை உரிமைகள் கடமைகள் தொடர்பான பாடப்பொருளில் அறிவினைப் பெற்று நல்ல குடிமைப் பண்புள்ள மாணவ மாணவிகளை உருவாக்க செயல் ஆய்வின் மூலம் மட்டுமே பெற முடியும் என உணரப்பட்டது. ஆகையால், எட்டாம் வகுப்பிலேயே அடிப்படை உரிமைகள், கடமைகள் என்ற பகுதியை மாணவ-மாணவிகளுக்கு எளிதில் புரிய வைக்க, இன்றைய அறிவியல் தொழில்நுட்ப

வளர்ச்சியின் மைல் கல்லாக விளங்கும் தகவல் தொழில் நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி காணொளிக் காட்சிகள் வாயிலாக பிரச்சனைகளுக்கு தீர்வு காண இந்த தலைப்பு தென் மண்டல செயல் ஆய்வு குழுவின் மூலம் ஒப்புதல் பெற்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## III. உத்தேசக் காரணங்கள்

- சமூக அறிவியலை ஆர்வமுடன் கற்பிக்காமை.
- பாடக் கருத்தை புரியாத நிலையில் மனப்பாடம் செய்யும் முறை.
- பெரும்பாலான வகுப்பறை செயல்பாடுகள் விரிவுரை முறையை பின்பற்றியே அமைந்துள்ள நிலை.
- கற்றல் - கற்பித்தல் செயல்பாடுகளில் மாணவர்கள் ஈடுபாட்டுடன் பங்கேற்காமை.
- மாணவர்கள் தகவல் தொழில் நுட்பக் கருவிகளின் முக்கியத்துவத்தை உணராத நிலை.
- பல் ஊடகத்தை பயன்படுத்தி கற்பிக்காத நிலை.
- வலுவூட்டும் செயல்களை கையாளுவதில்லை.
- மாணவர்கள் அரசியலமைப்பின் முக்கியத்துவம் உணரா நிலை.
- அடிப்படை உரிமைகள் பற்றிய முக்கியத்துவம் சரியாக புரியாத நிலை.
- அடிப்படை கடமைகள் நமக்குரியவை, நாம் செய்ய வேண்டியவை என்பதை உணராத நிலை.
- அடிப்படை உரிமைகள், கடமைகள் பற்றிய வேறுபாடுகள் உணராத நிலை.
- அடிப்படை உரிமைகள், கடமைகளின் எண்ணிக்கை பற்றி தெரியாத நிலை.

## IV. உத்தேசத் தீர்வுகள்

- சமூக அறிவியலின் உண்மை நிலையும், முக்கியத்துவமும் உணர்ந்து ஆர்வமுடன் கற்பித்தல்.
- மனப்பாடம் செய்யும் நிலையை தவிர்த்தல்.
- விரிவுரைமுறை எல்லாப் பாடப்பகுதிக்கும் பொருந்தாது என்பதை உணர்ந்து செயல்படுத்துதல்.

- ❖ பாடக் கருத்தை வளப்படுத்தி, எதிர்கால நலன் கருதி மாணவர்கள் ஈடுபாட்டுடன் கற்றல்.
- ❖ தகவல் தொழில்நுட்பக் கருவிகள் என்பது பாடக் கருத்தை எளிதாக்கும், உண்மை நிலையை புரியவைக்கும் என்பதை உணர்ந்து ஆர்வமுடன் கற்றல்.
- ❖ இன்றைய சூழலில் பல் ஊடகம் மூலம் கற்பித்தல் என்பது ஒரு சிறப்பான கற்பித்தல் முறை என்பதை அறிந்து பாடக் கருத்துகளை எளிய செயல்கள், காணொளிக் காட்சிகள், குறுந்தகடுகளாக (நலுவம்) தயாரித்து கற்பித்தல்.
- ❖ இணையத்தின் முக்கியத்துவம் இன்றைய கால கட்டத்தின் அவசியம் என்பதை உணர்ந்து அவற்றின் செயல்பாடுகளை பயன்படுத்தி வகுப்பறையில் கற்பித்தல்.
- ❖ மாணவர்கள் பாடக் கருத்தை புரிந்து கொள்வதில் பல்வேறு நிலைகளாக உள்ளனர் என்பதை தெரிந்து கற்பித்தல் செயல் பாடுகளில் வலுவூட்டும் செயல்களை நடைமுறைப்படுத்துதல்.

## V. கருது கோள்

எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளைப் புரிந்து கொள்வதில் ஏற்படும் சிக்கல்களை காணொளிக் காட்சிகள் வாயிலாக புரிந்து கொள்ளும் திறனை மேம்படுத்துதல்.

## VI. ஆய்வு முறைகள்

### அ. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர்

கோவில்பட்டி ஒன்றியம், பாரதி நகரில் அமைந்துள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பு பயிலும் 14 மாணவ - மாணவியர்கள்.

### ஆ. ஆய்வுக் கருவி

எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு சமூக அறிவியல் பாடத்தில் குடிமையியல் பிரிவில் அடிப்படை உரிமைகளும், கடமைகளும் என்ற பாடப்பகுதியிலிருந்து 25 மதிப்பெண்களுடைய புறவய வினாக்கள் ஆராய்ச்சியாளரால் தயாரிக்கப்பட்டு முன்னடைவு தேர்வு மற்றும் பின்னடைவு தேர்வுகள் நடத்தப்பட்டன.

### இ. விளைவுறு செயல்கள்

முன் தேர்வின் மூலம் மாணவர்களின் அடைவு நிலை தெளிவாக உணரப்பட்டது. மாணவர்கள் பிரச்சனைக்குரிய இப்பாடப்பகுதியை நன்கு புரிந்து கொள்ளவும், அடைவுத் திறன் மேம்படவும் கீழ்க்காணும் செயல்பாடுகள் வடிவமைக்கப்பட்டு ஒரு வார காலம் ஆய்வாளரின் மேற்பார்வையின் கீழ் இச்செயல் தினமும் ஒரு மணி நேரம் நடத்தப்பட்டது.

கற்றல் செயல்பாடுகளுக்குத் தேவையான வசதிகள் மாணவர்களுக்கு ஏற்படுத்தி தரப்பட்டது.

### செயல் 1. (காணொளிக்காட்சி)

இந்திய அரசியலமைப்பு, பாராளுமன்றம் தொடர்பாக காணொளிக் காட்சிகள் வாயிலாக பாடப்பொருள் கற்பிக்கப்பட்டு அவற்றில் எழும் சந்தேகங்களுக்கு விளக்கம் தரப்பட்டது.



## செயல் 2. (காணொளிக்காட்சி)

இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்ட அடிப்படை உரிமைகள் தொடர்பான காணொளிக்காட்சி பயன்படுத்தி மாணவர்களுக்கு பாடப்பொருள் புரியவைக்கப்பட்டது.





**செயல் 3. (காணொளிக்காட்சி)**

இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்ட அடிப்படை உரிமைகளில் முதலாவதாக சமத்துவ உரிமை குறித்த காணொளிக்காட்சி மூலம் சமத்துவ உரிமை தொடர்பான கருத்துகள் மாணவர்களுக்கு மனதில் நிலை நிறுத்தப்பட்டது.









**செயல் 4. (கலந்துரையாடல்)**

பாலின சமத்துவம், வேலைவாய்ப்பில் சமத்துவம், தீண்டாமை ஒழிப்பு, சட்டத்தின் முன் அனைவரும் சமம் தொடர்பான கருத்துகளை கூறச்செய்தல் மூலம் மாணவ - மாணவிகள் கலந்துரையாடலில் ஈடுபட்டு பாடப் பகுதியை அறிந்து கொள்ளுதல்.





**செயல் 5. (விவாதம்)**

தனி நபர் சுதந்திரம், பேச்சுகளை மற்றும் கருத்துகளை வெளியிடும் உரிமை, இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் வாழும், செல்லும் உரிமை மற்றும் சுதந்திர உரிமை குறித்து மாணவர்கள் குழுவாக விவாதம் செய்து பாடப் பகுதியை அறிந்து கொள்ளுதல்.





## செயல் 6. (காணொளிக்காட்சி)

சுரண்டலிலிருந்து பாதுகாக்கும் உரிமை குறித்து காணொளிக்காட்சி வாயிலாக பாடக்கருத்துகள் மாணவர்கள் மனதில் ஆழமாக புரியவைக்கப்பட்டது.






## செயல் 7. (காணொளிக்காட்சி)

மதச் சுதந்திர உரிமை பற்றிய காணொளிக்காட்சி மூலம் பாடக்கருத்துகள் மாணவர்கள் மனதில் நிலைநிறுத்தப்பட்டது.





**செயல் 8. (கருத்து பகிர்வு)**

கட்டாயக் கல்வி சட்டம் 2009ன் அடிப்படையில், கல்வியின் அவசியம் குறித்து மாணவர்களிடம் தனித்தனியாக கேள்விகள் கேட்டு கருத்துகளை பகிரச் செய்தல் மூலம் பாடக் கருத்துகளை வலுவாக புரியவைக்கப்பட்டது.





## செயல் 9. (விவாதம்)

அரசியலமைப்பின்படி தீர்வு காணும் உரிமை சரத்து 32 குறித்து குழு விவாதம் செய்து மாணவர்களுக்கு பாடக்கருத்தினை அறிய செய்தல். மேலும் உச்ச நீதி மன்றத்தின் செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.





## செயல் 10. (காணொளிக்காட்சி)

அடிப்படை கடமைகள் தொடர்பான சரத்துகளை காணொளிக் காட்சி, மூலம் மாணவர்களுக்கு விளக்கி புரியவைக்கப்பட்டது.





## செயல் 11. (காணொளிக்காட்சி)

அடிப்படை கடமைகளின் சரத்துகளின் எண்ணிக்கை குறித்து காணொளிக்காட்சி மூலம் விளக்கம் தரப்பட்டது.






## செயல் 12. (காணொளிக்காட்சி)

தேசிய சின்னம், தேசியக்கொடி, மற்றும் தேசிய கீதத்திற்கு எவ்வாறு மதிப்பளிக்க வேண்டும் என்பதை பற்றி காணொளிக்காட்சி மூலம் விளக்கப்பட்டது.








## செயல் 13. (செய்து காட்டல் முறை)

தேசியக் கொடிக்கு முறையாக நாம் எவ்வாறு வணக்கம் செலுத்த வேண்டும் என்று மாணவர்களுக்கு செய்துகாட்டி புரிய வைக்கப்பட்டது.





## செயல் 14. (காணொளிக்காட்சி) மற்றும் (கருத்துப்பகிர்வு - எனது கடமை)

இயற்கை வளங்களையும் சுற்றுச் சூழலையும் நாம் எவ்வாறு காக்க வேண்டும் என்பது குறித்து காணொளிக்காட்சி மூலம் காட்டப்பட்டது. எனது கடமைகள் என்ன என்பதை பற்றிய கருத்துகளை பகிரச் செய்து மாணவர்களுக்கு தங்களின் கடமைகள் குறித்து விளக்கம் தரப்பட்டது.







## செயல் 15 ( காணொளிக்காட்சி)

நாம் பொது சொத்துக்களை அக்கறையுடன் எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பதைப் பற்றிய காணொளிக் காட்சி மூலம் பாடக் கருத்து மாணவர்கள் மனதில் நிலை நிறுத்தப்பட்டது.








## செயல் 16 (காணொளிக்காட்சி)

இந்திய சுதந்திர போராட்ட வீரர்களைப் பற்றிய காணொளிக்காட்சிகள் காட்டப்பட்டு வீரர்களின் சுதந்திரப் போராட்ட உணர்வு, தியாகம் எவ்வாறு இருந்தது என்று மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.






## செயல் 17 (தனிநபர் நடிப்பு)

மாணவர்களை தனித்தனியாக அழைத்து ஒரு சுதந்திரபோராட்ட வீரரின் பெயரினை கூறச்செய்து, அவரின் சுதந்திரப் போராட்டம் குறித்து நடித்து காட்டச் செய்தல்.



## செயல் 18 (கலந்துரையாடல்)

நாட்டின் வளர்ச்சிக்கு "எனது பங்களிப்பு" குறித்து கருத்துக்கள் கேட்டு, மாணவர்களை கலந்துரையாட செய்தல்.



## செயல் 19 ( காணொளிக்காட்சிகள்)

அனைவருக்கும் கல்வி குறித்த காணொளிக் காட்சி காட்டப்பட்டு கல்வியின் வளர்ச்சிக்கு அரசின் பங்கினை பற்றி விளக்கப்பட்டது.








## செயல் 20 (கலந்துரையாடல்)

"அடிப்படை உரிமைகள், கடமைகள்" ஒரு "நாணயத்தின் இரு பக்கங்கள்" ஒரு உரிமைக்கும் இணையாக ஒரு கடமை உண்டு. ஒவ்வொருவரும் தங்களின் கடமைகளை நிறைவேற்றினால் பிறரின் உரிமைகள் காக்கப்படும்" என்ற கருத்து தொடர்பாக மாணவர்களை கலந்துரையாட செய்தல்.





## VII. விவரப் பகுப்பாய்வு

எட்டாம் வகுப்பு படிக்கும் 14 மாணவ - மாணவியர்களின் முன்னடைவு மற்றும் பின்னடைவு சோதனைகளின் மதிப்பெண்கள் கீழ்காணும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

இம்மதிப்பெண்களின் அடிப்படையில் கூட்டுச் சராசரி கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

முன் - பின் தேர்வு மதிப்பெண்கள் பட்டியல் விபரம்

நகராட்சி நடுநிலைப்பள்ளி, பாரதிநகர், கோவில்பட்டி

| **வ.எண்** | **முன் சோதனை தேர்வு மதிப்பெண்** | | **பின் சோதனை தேர்வு மதிப்பெண்** | |
|---|---|---|---|---|
| | **25** | **100** | **25** | **100** |
| 1 | 7 | 28 | 21 | 84 |
| 2 | 10 | 40 | 25 | 100 |
| 3 | 8 | 32 | 22 | 88 |
| 4 | 5 | 20 | 20 | 80 |
| 5 | 9 | 36 | 25 | 100 |
| 6 | 6 | 24 | 21 | 84 |
| 7 | 7 | 28 | 22 | 88 |
| 8 | 5 | 20 | 21 | 84 |
| 9 | 6 | 24 | 23 | 92 |
| 10 | 12 | 48 | 25 | 100 |
| 11 | 11 | 44 | 25 | 100 |
| 12 | 10 | 40 | 25 | 100 |
| 13 | 7 | 28 | 22 | 88 |
| 14 | 8 | 32 | 24 | 96 |
| **மொத்தம்** | **111** | **444** | **321** | **1284** |
| **சராசரி** | **7.92** | **31.71** | **22.92** | **91.71** |

## முன் - பின் சோதனை தேர்வின் மதிப்பெண்






## முன் - பின் சோதனை தேர்வின் மதிப்பெண்






## VIII. ஆய்வின் முடிவு

செயல் ஆய்வின் முடிவில் முன் அடைவுச் சோதனையின் கூட்டுச் சராசரி மதிப்பெண்களையும் (31.71%), பின் அடைவுச் சோதனையின் கூட்டுச் சராசரி மதிப்பெண்களையும் (91.71%) ஒப்பிடும் போது, கூட்டுச் சராசரி பின் அடைவுச் சோதனையில் 60% கூடுதலாக உள்ளது. எனவே இந்த ஆய்வின் மூலம் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு சமூக அறிவியல் பாடத்தில் அடிப்படை உரிமைகளும் மற்றும் கடமைகளும் என்ற பாடப்பகுதியை புரிந்து கொள்வதற்கு காணொளிக் காட்சிகளை பயன்படுத்துவதன் மூலம் மாணவர்களின் அடைவுத்திறனை மேம்படுத்த இயலும் என்பது தெளிவாகின்றது.

## IX. ஆய்வின் பயன்கள்

### அ) மாணவர்களுக்கு

எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு இந்திய அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள், கடமைகள் பகுதியினை காணொளிக் காட்சிகள், நழுவங்கள், கலந்துரையாடல், தனிநபர் நடிப்பு, விவாதம் வாயிலாக கற்பிப்பதால்,

- மாணவ - மாணவிகள் மகிழ்ச்சியாக கற்றுக் கொள்கின்றனர்.
- மாணவ - மாணவிகள் எளிமையாக பாடக் கருத்துகளை புரிந்து கொள்கின்றனர்.
- அனைத்து நிலை மாணவர்களின் அடைவுத்திறன் இதன் மூலம் மேம்படுத்தப்படுகின்றது.

இவையே இந்த ஆய்வின் மூலம் மாணவ - மாணவிகளுக்கு கிடைக்கும் பயன்கள் ஆகும்.

## ஆ) ஆசிரியருக்கு

சமூக அறிவியல் பாடத்தில் குடிமையியல் பகுதியில் அமைந்துள்ள அடிப்படை உரிமைகளும் கடமைகளும், என்ற பகுதியினை கற்பிக்க தகவல் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி காணொளிக் காட்சிகள், நழுவங்கள் வாயிலாக கற்பிப்பதன் மூலமும், மேலும் எளிய செயல்பாடுகளை வடிவமைத்து அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து வகுப்பறையில் ஆசிரியர் செயல்படுவதால் மாணவ - மாணவிகளுக்கு புரியும் வண்ணம் எளிதாக கற்றுக் கொடுக்க முடிகின்றது.

- ஆசிரியர்களால் அனைத்து மாணவ - மாணவிகளையும் கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளில் ஒருங்கே ஈடுபட வைக்க முடிகின்றது.
- ஆசிரியரின் வேலைப்பளு குறைகின்றது.
- கால விரயம் தவிர்க்கப்படுகிறது.
- மாணவர்களை குருட்டு மனப்பாடம் செய்யாமல் பொருள் புரிந்து கற்க வைக்க ஆசிரியருக்கு பயன்படுகிறது.

இந்த அரிய கருத்துக்கள் இந்த ஆய்வின் மூலம் ஆசிரியர்களுக்கு கிடைக்கும் பயன்கள் ஆகும்.

## X. ஆய்வுச்சுருக்கம்

### ஆய்வுத்தலைப்பு

அடிப்படை உரிமைகள் மற்றும் அடிப்படை கடமைகளை எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு காணொளிக் காட்சிகள் வாயிலாக புரிந்துகொள்ளும் நிலையை மேம்படுத்துதல்.

### உத்தேச காரணிகள்

- சமூக அறிவியலை ஆர்வமுடன் கற்பிக்காமை.
- பாடக்கருத்தை புரியாத நிலையில் மனப்பாடம் செய்யும் முறை.
- பெரும்பாலான வகுப்பறை செயல்பாடுகள் விரிவுரை முறையையே பின்பற்றி அமைந்துள்ள நிலை.
- மாணவர்கள் தகவல் தொழில்நுட்பக் கருவிகளின் முக்கியத்துவம் உணராத நிலை.
- வீடியோ படக்காட்சிகளை பயன்படுத்தி கற்பிக்காத நிலை.

## உத்தேச தீர்வுகள்

- சமூக அறிவியலின் உண்மை நிலையும் முக்கியத்துவமும் உணர்ந்து ஆர்வமுடன் கற்பித்தல்.
- மனப்பாடம் செய்யும் நிலையை தவிர்த்தல்.
- தகவல் தொழில் நுட்பக் கருவிகள் என்பது பாடக் கருத்தை எளிதாக்கும், உண்மை நிலையை புரிய வைக்கும் என்பதை உணர்ந்து ஆர்வமுடன் கற்றல்.
- இன்றைய சூழலில் பல ஊடகம் மூலம் கற்பித்தல் என்பது ஒரு சிறப்பான கற்பித்தல் முறை என்பதை அறிந்து பாடக் கருத்துகளை, குறுந்தகடுகளாக தயாரித்து கற்பித்தல், காணொளிக் காட்சிகளாக கற்பித்தல்.

## கருதுகோள்

எட்டாம் வகுப்பு மாணவர்கள் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளை புரிந்து கொள்வதில் ஏற்படும் சிக்கல்களை காணொளிக் காட்சிகள் வாயிலாக புரிந்து கொள்ளும் திறனை மேம்படுத்த இயலும்.

## ஆய்வு முறைகள்

- ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர்

கோவில்பட்டி ஒன்றியம், பாரதி நகரில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பு பயிலும் 14 மாணவ - மாணவிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர்.

- ஆய்வுக்கருவி - புற வய வினாத்தாள்கள்.

## வினைவுறு செயல்கள்

இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்ட அடிப்படை உரிமைகள், கடமைகள் பற்றிய காணொளிக் காட்சிகள், நழுவங்கள் அவை தொடர்பான காணொளிக் காட்சிகள், மாணவர்குழு விவாதம், கலந்துரையாடல், தனிநபர் நடிப்பு, போன்ற செயல்பாடுகள்.

## விவரப் பகுப்பாய்வு

முன்னடைவு மற்றும் பின்னடைவுச் சோதனைகளின் மதிப்பெண்கள் பட்டியலிடப்பட்டன. மதிப்பெண்கள் அடிப்படையில் கூட்டுச்சராசரி கண்டுபிடிக்கப்பட்டது.

## ஆய்வின் முடிவு

அடிப்படை உரிமைகள் , அடிப்படை கடமைகள் என்ற பாடப்பகுதியை மாணவர்கள் புரிந்து கொள்ளும் நிலையை அதிகப்படுத்துவதற்காக காணொளிக்காட்சிகள், நழுவங்கள் பயன்படுத்துவதன் மூலம் மாணவர்களின் அடைவுத்திறனை மேம்படுத்த இயலும் என்பது தெளிவாகின்றது.

## ஆய்வின் பயன்கள்:

- மாணவர்கள் மகிழ்ச்சியோடு கற்றலில் ஈடுபட்டனர்.
- காணொளிக் காட்சிகளைப் பயன்படுத்தி கற்பதால் பாடக்கருத்துகள் எளிதாக்கப்பட்டு மாணவ - மாணவியர்கள் ஆர்வமுடன் புரிந்து கொண்டனர்.
- இந்த ஆய்வு முறை பாட ஆசிரியர்களுக்கு ஆலோசனை வழங்குவதாகவும் மேலும் வழிகாட்டுவதாகவும் அமைந்தது.
- மாணவர்களுக்கு பாடக்கருத்துகள் எளிதாக மாணவர்கள் மனதில் பதிய வைக்கப்பட்டது.

## XI. மேற்கோள் நூல்கள்


1. சமூக அறிவியல் கற்பித்தல் - முதலாமாண்டு வளநூல் மறுபதிப்பு - 2014 (ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி). தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம். சென்னை -6.
2. நான்காம் வகுப்பு - சமூக அறிவியல் பாடநூல், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம். சென்னை -6.
3. ஏழாம் வகுப்பு - சமூக அறிவியல் பாடநூல், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம். சென்னை -6.
4. தர்மராஜ், ஜே(2008) இந்திய அரசியலமைப்பு, டென்சி பப்ளிகேஷன்ஸ், சிவகாசி.
5. செயல் ஆராய்ச்சி - ஓர் அறிமுகம் D.T.E.R.T, சென்னை-6.
6. தேவ இரக்கம், எஸ் (1985) புள்ளியியல், ஜோதி பதிப்பகம், வெளியீடு, திருநெல்வேலி.
7. ராஜம்மாள் ராஜகோபால்.க.(2006) கல்வியில் - மதிப்பிடுதல், புள்ளியியல் அடிப்படைகள் மற்றும் ஆராய்ச்சி இவற்றின் பங்கு, சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை.


## XII. பிற்சேர்க்கை

1. முன்னடைவு மற்றும் பின்னடைவு வினாத்தாள்கள்.
2. புகைப்படங்கள்.

## மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், வானரமுட்டி
## தூத்துக்குடி மாவட்டம்.

# செயலாய்வு முன் / பின் தேர்வு

மதிப்பெண்கள் : 25 நேரம் : 25 நிமிடங்கள்

---

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. (10x1=5)**

1. இந்திய அரசியலமைப்பு சட்டம் எந்தாண்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

அ) 1947 ஆ) 1949 இ)1950 ஈ) 1952

2. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் சிற்பி எனப்படுபவர்

அ) கிருபளானி ஆ) அம்பேத்கர்

இ) சரோஜினி நாயுடு ஈ) கே. எம். முன்சி

3. நம் அரசியலமைப்பு சட்டத்தின் படி, தற்போது அடிப்படை உரிமைகள் மொத்தம் எத்தனை?

அ) ஆறு ஆ) எட்டு இ) பனிரெண்டு ஈ) மூன்று

4. உச்சநீதிமன்றத்தை நேரடியாக அணுகும் உரிமை கீழ்காணும் எதன் மூலம் பெறப்படுகிறது?

அ) மதசுதந்திரத்திற்கான உரிமை

ஆ) அரசியலமைப்பின்படி தீர்வுகாணும் உரிமை

இ) சமத்துவ உரிமை

ஈ) சுதந்திர உரிமை

5. அடிப்படை கடமைகள் என்பது எது?

அ) அனைத்து குடிமக்கள் சமத்துவம் பெற உதவுகிறது.

ஆ) அரசியலமைப்பு சட்டத்தால் பாதுகாக்கப்படுகிறது.

இ) தனிமனிதனின் முழு பாதுகாப்பு, முன்னேற்றத்திற்கு இது அவசியமாகிறது.

ஈ) குடிமக்கள் ஆற்ற வேண்டிய பல்வேறு கடமைகளை பற்றி கூறுவது.

6. வயது வந்தோர் வாக்குரிமையில் கீழ்கண்ட எது பொறுந்தாது?

அ) 18 வயது வந்தோர் வாக்களிக்கலாம்.

ஆ) சாதி, நிறம் வேறுபாடுகளின்றி அனைவரும் வாக்களிக்கலாம்.

இ) படித்தோர், படிக்காதோர் வேறுபாடின்றி அனைவரும் வாக்களிக்கலாம்.

ஈ) சொத்து உடையோர் மட்டுமே வாக்களிக்க முடியும்.

7. சுதந்திர உரிமையின் கீழ் வருவது

அ) வாழும் உரிமை

ஆ) எந்த மதத்தையும் பின்பற்றலாம்.

இ) கல்வி நிறுவனத்தை நடத்த சிறுபான்மையினறுக்கு உரிமை

ஈ) சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

8) அரசியல் அமைப்புச் சட்டத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று

அ) மதச்சார்புடைமை ஆ) எல்லா நாடுகளிலும் பின்பற்றப்படுகிறது.

இ) இறையாண்மை ஈ) சுரண்டல்

9) தற்பொழுது இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை கடமைகளின் எண்ணிக்கை

அ) 6 ஆ) 7 இ) 10 ஈ) 11

10) இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் நடைமுறைக்கு கொண்டு வந்த நாள்.

அ) 1950 ஜனவரி 26 ஆ) 1947 ஆகஸ்டு 15

இ) 2010 ஏப்ரல் 1 ஈ) 1949 டிசம்பர் 1

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக. (5x1=5)**

1) இந்திய நாட்டின் தலைவர் ____________________

2) நமது நாட்டின் உச்ச நீதிமன்றம் அமைந்துள்ள இடம் ____________________

3) நமது தேசிய கொடியின் நீள, அகல விகிதம் ______________________

4) நமது தேசிய மரம் ________________

5) நமது தேசிய ____________ ல் சத்ய மேவ ஜெயதே என்னும் வார்த்தை பொறிக்கப்பட்டுள்ளது.

**III. பொருத்துக.** **(5x1=5)**

1) தேசிய நாள் காட்டி - வந்தே மாதரம்

2) தேசிய ஆறு - சாகா காலப் பிரிவு

3) தேசிய பாடல் - கங்கை

4) குடியரசு தினம் - தொழிலை கட்டாயப்படுத்தி செய்ய தடைசட்டம்

5) சுரண்டலிலிருந்து பாதுகாக்கும் உரிமை - 26 ஜனவரி 1950

**IV. சரியா / தவறா. (சரியானவற்றை குறிக்கவும்)** **(5x1=5)**

1) ஆறு வயது முதல் 14 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் கல்வி பெறுவதற்கு உரிமை உள்ளது. **(சரி / தவறு)**

2) இந்திய அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம் Dr.சச்சிதாநந்தசின்கா தலைமையில் நடைபெற்றது. **(சரி / தவறு)**

3) இந்திய மக்களுக்கு முழு உரிமையையும் இந்திய அரசாங்கம் வழங்கியுள்ளது. **(சரி / தவறு)**

4) அரசு சட்டத்தை இயற்றும் போது அரசு நெறிமுறைக் கோட்பாடுகளை பின்பற்ற வேண்டும். **(சரி / தவறு)**

5) இந்தியா ஒரு மத சார்புள்ள நாடு. **(சரி / தவறு)**

## முன் - பின் சோதனைகள்





# கற்றல் - கற்பித்தல் செயல்பாடுகள்






















இந்தியக் குடிமகனின்
அடிப்படைக் கடமைகள்


முகவுரை
உரிமைகளும் கடமைகளும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள். ஒரு உரிமைக்கும் இணையாக ஒரு கடமை உண்டு. ஒழுங்காக நிறைவேற்றப்பட்ட உரிமையிலிருந்து கடமைகள் எழுகின்றன. ஒவ்வொருவரும் தங்களின் கடமையை நிறைவேற்றினால் உரிமைகள் காக்கப்படும்.

## அடிப்படை கடமைகளின் எண்ணிக்கை

இந்திய அரசியல் சட்டம் பகுதி IVஅ பிரிவு 51 அ இதில் உள்ள 42 ஆவது அரசு சட்டத்திருத்தம் இந்தியக் குடிமக்களின் கடமைகளை வலியுறுத்துகிறது. அதன் படி மொத்தம் 11 அடிப்படைகடமைகள் வரையறுக்கப்பட்டுள்ளது.

## முதல் கடமை

இந்திய அரசின் சட்ட திட்டம், தேசிய சின்னம், தேசியக் கொடி மற்றும் தேசிய கீதத்திற்கு மதிப்பு அளித்தல்.


இரண்டாவது கடமை
தேசிய சுதந்திரப் போராட்ட வீரர்களின் உன்னத உணர்வை நினைத்துப் பேணுதல்.


மூன்றாவது கடமை
நமது நாட்டின் இறைமை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை நிலை நிறுத்துதலும், பாதுகாத்தலும்

நான்காவது கடமை

நாட்டின் பாதுகாப்பிற்காகச் செயலாற்றல், தேவை ஏற்பட்டால் பாதுகாப்பு பணியில் ஈடுபடல்.

ஐந்தாவது கடமை

மதம் மொழி, இனம், வகுப்பு வேற்றுமைகளைத் துறந்து சகோதர உணர்வுடன் தேசிய ஒற்றுமை ஓங்கச்செய்தல்.


ஆறாவது கடமை
நம்முடைய பண்பாடு பன்முகப் பாரம்பரியக் கலாசாரத்தின் மேன்மையை மதித்தல், பாதுகாத்தல்.


ஏழாவது கடமை
காடு, ஏரி, குளம், ஆறு, மற்றும் விலங்குகள் போன்ற இயற்கை வளங்களையும், சுற்றுச்சூழலையும் பாதுகாத்தல் - மேம்படுத்துதல்.


எட்டாவது கடமை
அறிவியல் மனப்பான்மை மனிதநேயம், ஆய்வு மனப்பான்மை, சீர்திருத்த சிந்தனை ஆகியவற்றை மேம்படுத்துதல்


ஒன்பதாவது கடமை
நாட்டின் பொதுச்சொத்துக்களை அக்கறையுடன் பாதுகாத்தல், வன்முறையைக் கைவிடல்.

## பத்தாவது கடமை

நாடு தன்னுடைய முயற்சியிலும், சாதனைகளிலும் தொடர்ந்து முன்னேறும் வகையில் அனைத்துத் துறைகளிலும் தனிமனித மற்றும் கூட்டு நடவடிக்கைகளில் மேன்மைக்கு பாடுபடுதல்.

## பதினொன்றாவது கடமை

பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் 6 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகள் கல்வி பெறுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இக்கடமை 2002-ம் ஆண்டு 86 -வது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி இணைக்கப்பட்டது ஆகும்.